நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**MC. No. 9/2024**

**P.W.2 –ன் வாக்குமூலம்**

**(மனுதாரர்தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | குணசேகரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | மாரியப்பகவுண்டர் |
| கிராமம் | : | பெரியசோரகை |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | 63 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,ஏப்ரல் மாதம், 06–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**இருதரப்பினரும் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.20 PM

1. நான் அழைப்பாணையின் பேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்கவில்லை. தனலட்சுமியின் அண்ணன் சேகர் அழைத்ததன் பேரில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். உறுதிமொழி ஆவணத்தில் உள்ள சங்கதிகளை நான் சொல்ல வழக்கறிஞர் தயார் செய்தார். தனலட்சுமி எனது

உறவினர் அல்ல.

2. நான் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினராக உள்ளேன். நான் பெரியசோரகை கிராமத்தில் குடியிருக்கிறேன். தனலட்சுமி எம்.காளிப்பட்டி, பனங்காட்டில் குடியிருக்கிறார். அது பெரியசோரகை கிராமம் கிடையாது. சுரேஷ்குமார் எம்.காளிப்பட்டி, பனங்காட்டில்தான் குடியிருக்கிறார். நான் இருக்கும் ஊருக்கும் எம்.காளிப்பட்டி ஊருக்கும் சுமார் 8 கிலோமீட்டர் தூரம் இருக்கும்.

3. நான் ஏற்கனவே உள்ளாட்சி மன்றத்தில் நங்கவள்ளி ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினராக இருந்துள்ளேன் என்றால் சரிதான். தனலட்சுமியை எனக்கு நேரடியாக எனக்கு தெரியாது. அவரது அப்பாதான் எனக்கு பழக்கம். பக்கத்து ஊர் என்ற வகையில் அவரது அப்பா எனக்கு பழக்கம். தனலட்சுமிக்கு முதல் திருமணம் நடைபெற்றது பற்றி கேள்விப்பட்டேன். ஆனால் நேரடியாக எனக்கு தெரியாது.

4. தனலட்சுமிக்கு முதல் திருமணம் ஆன விவரத்தை அவரது அப்பாவும் அண்ணன் சொன்னார். 2019 ம் வருடம் முதல் திருமணம் நடைபெற்றதாக சொன்னார்கள். அந்த முதல் திருமணம் சட்டப்படி நீதிமன்றத்தின் மூலம் ரத்து செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த உறுதிமொழி ஆவணத்தில் பத்திரம் எழுதி இருவரும் பிரிந்து கொண்டதாக சொல்லியுள்ளேன். தேதி குறிப்பிட்டு நான் சொல்லவில்லை. தேதி எனக்கு தெரியாது.

5. அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. என் முன்னிலையில் எழுதப்படவில்லை. அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. எதிர்மனுதாரருக்கும் மனுதாரருக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்று எனக்கு நேரடியாக தெரியாது. 2021 ல் திருமணம் ஆனதாக சொன்னார்கள்.

6. மேற்படி திருமணத்திற்கு மனுதாரரின் தந்தை எனக்கு அழைப்பு கொடுக்கவில்லை. நான் சொல்வது அனைத்தும் தவறென்றாலும் நான் அரசியல்வாதி என்ற முறையில் மனுதாரர் தரப்பினர் அழைத்ததன்

அடிப்படையில் நான் இங்கு வந்து தெரியாத சங்கதிகளை குறிப்பிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. திருமணத்தை பற்றி உறுதிமொழி ஆவணத்தில் நான் தெரிவித்துள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியாதது என்றால் சரிதான். இருவரும் எவ்வாறு வாழ்ந்தார்கள், எவ்வளவுநாள் சேர்ந்து வாழ்ந்தார்கள் போன்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

8. அதேபோல் எப்போது குழந்தை பிறந்தது, மாமியார் கொடுமை செய்ததாக சொல்லும் சங்கதிகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மனுதாரர் 8 மாதம் கர்ப்பிணியாக இருந்தது எப்போது என்றால் 2021 ம் வருடம் செப்டம்பர் மாதமாகும். சமாதானம் பேச நானும், தனலட்சுமி, அண்ணன் சேகர், சேட்டு, பழனிசாமி, முத்துக்கவுண்டர் மகன் குமார் ஆகியோர் சென்றோம்.

9. சமாதானம் பேச வருவதாக முன்கூட்டியே அவர்களுக்கு தகவல் கொடுக்கவில்லை. இதுபோல் பஞ்சாயத்து பேசுவது எனக்கு வழக்கம் இல்லை. பஞ்சாயத்தில் உறுப்பினராக இருந்ததை வைத்துக்கொண்டு இதுபோல் ஊருக்குள் பஞ்சாயத்து பேசி தரப்பினர்களை கட்டாயப்படுத்தி சட்டம் விரோதமாக பணபலம் பார்ப்பதுதான் எனது வழக்கம் என்றால் சரியல்ல.

10. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் மற்றும் அவரது அம்மா மட்டும்தான் இருந்தார்கள். அவர்கள் தரப்பில் ஊர்காரர்கள் யாரும் இல்லை. நாங்கள் சமாதானம் பேச செல்லவில்லை என்றாலும் மனுதாரரை வரதட்சனை கொடுமை செய்ததாக புகார் கொடுப்போம் என்று மிரட்டி ஒரு பெருந்தொகையை கேட்டேன் என்றாலும் கொடுத்தால் விட்டுவிடுவோம் என்று மிரட்டினோம் என்றால் சரியல்ல.

11. நான் உறுதிமொழி ஆவணத்தில் 3வது பக்கத்தில் சொல்லியுள்ள விவரங்கள் பிறர் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மனுதாரர் இந்த பிரச்சனை சம்மந்தமாக எங்கெங்கு புகார் கொடுத்தார், அதில் என்னென்ன முடிவுகள் வந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

12. இந்த பிரச்சனை சம்மந்தமாக எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றாலும் மனுதாரரின் அப்பா எனக்கு அரசியல் ரீதியாக நண்பர் என்பதால் அவரிடம் பணம் வாங்கிக்கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 04.45 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**